நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்

**சி.சி.எண். 40/2016**

2021ம்ஆண்டு நவம்பர் திங்கள் 24ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | : | **மாலதி** | **வயது** | : **35** |
| **க/பெ.** | : | **ரமேஷ்** | **தொழில்** | : **இல்லதரசி** |
| **ஊர்** | : | **மல்லப்பள்ளி** | **சமயம்** | : |
| **வட்டம்** | : | **நாட்றம்பள்ளி** | **சாதி** | : |
| **மாவட்டம்** | : | **திருப்பத்தூர்** | | |

**முதல் விசாரணை:-**

நான் மல்லப்பள்ளி கிராமத்தில் வசிக்கிறேன். இல்லதரசியாக உள்ளேன்.1ம் எதிரி என் கணவர். 2ம் எதிரி எனது மாமனார். 3ம் எதிரி எனதுமாமியார். கடந்த 22.01.2010ம்தேதி எனக்கும் 1ம் எதிரிக்குமிடையே புதுப்பேட்டை சாரதா தீர்த்தகிரி திருமண மண்டபத்தில் பெரியோர்கள் ஏற்பாட்டின் படி திருமணம் நடந்தது. எனது திருமணத்திற்கு எனது பெற்றோர் 20 சவரன் தங்க நகை , வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் பல்சர் பைக் ஆகியவற்றை சீர்வரிசையாக கொடுத்தார்கள்.திருமணத்திற்கு பின்னிட்டு கடந்த 25.10.2010ம்தேதி எனக்கு பெண்குழந்தை பிறந்தது. அதற்கு பிறகு எனக்கும் எனது கணவருக்குமிடையே சின்ன சின்ன பிரச்சனைகள் மற்றும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. எனவே நான் எனது அம்மாவீட்டிற்கு வந்துவிட்டேன். 1ம் எதிரி குழந்தையை கவனிக்காமல் குடும்பத்தை பராமரிக்காமல் இருந்து வந்தார்.அதன் பிறகு 1ம் எதிரி திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் மணமுறிவிற்காக என் மீது வழக்கு தொடர்ந்தார். அதனால் நான் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆட்பட்டேன். அதன் பிறகு நான் என் கணவரின் மீது புகார் அளித்தேன். என் கணவர் தொடர்ந்த மனமுறிவு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. அதன் பிறகு குடும்பத்தில் பெரியோர்களின் அறிவுரையின் படி எனது கணவர் வீட்டார் என்குழந்தையை வந்து பார்த்தார்கள்.பிறகு நாங்கள் சமாதனம் ஆகிவிட்டோம்.கடந்த மூன்று மாதங்களாக பேச்சு வார்த்தை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வழக்கு முடிந்தால் அதன் பிறகு என்னுடன் சேர்ந்து வாழ்வதாக 1ம் எதிரியான என் கணவர் கூறியுள்ளார். எனவே நான் நீதிமன்றத்தில் எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்த சமாதான மனுவில் கையெழுத்து போட்டுள்ளேன். நான் சென்னை

உயர்நீதிமன்றத்தில் வழக்கின் எதிரிகளின் மீது குற்ற வழக்கு தொடர்வதற்காக அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு உத்திரவு வழங்கும் படி கேட்டு மனுதாக்கல் செய்து நீதிமன்ற உத்திரவின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.அதற்கு முன்பாக நான் திருப்பத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிரிகளின் மீது புகார் அளித்திருந்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் அளித்த புகார் ஆகும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை அரசு தரப்பில் விசாரிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கியதன் பேரில் அ.த.கு.வி:-)**

திருமணம் முடிந்த பிறகு ஆஜர் எதிரிகள் எனது தாய் வீட்டில் போட்ட நகைகள் எதுவும் சரியில்லை வேறு நகையை கேட்டு வாங்கி வா என்று மிரட்டியதாக எனது புகாரிலும் வாக்குமூலத்திலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 3ம் எதிரியான எனது மாமியார் என்னை கெட்ட வார்த்தையால் திட்டியதாக புகாரில் கூறியுள்ளேன் என்றால் ஆரம்பத்தில் அவ்வாறு இருந்தது. அதனால் கூறினேன். 3ம் எதிரி ரூ.10லட்சம் பணம் வாங்கி வந்தால் தான் என்னை வீட்டில் சேர்பேன் என்று கூறியதாக புகாரிலும் வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆரம்பத்தில் அவ்வாறு பிரச்சனை இருந்தது. இப்போது இல்லை.மூன்று எதிரிகளும் சேர்ந்து தினமும் என்னை பணம் கேட்டு அடித்து துன்புறுத்தினார்கள் என்றாலும், கொலை செய்து விடுவதாக மிரட்டினார்கள் என்றாலும் ஆரம்பத்தில் அவ்வாறு செய்தார்கள். இப்போது சமாதனம் ஆகிவிட்டோம்.தற்சமயம் எதிரிகளுடன் சமாதனம் ஆகிவிட்டதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.1ம் எதிரி என்னுடன் சமாதனம் பேசி வீட்டிற்கு அழைத்து செனறு நல்லபடியாக குடும்பம் நடத்துவதாக வாக்குறுதி அளித்துள்ளார்.

எ.த.கு.வி:-

எனக்கும் என் கணவர் குடும்பதாருக்கும் ஆரம்பித்திலிருந்து குடும்ப பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். எங்களுக்குள் ஏற்பட்ட சிறு சிறு சண்டைகள் பெரியதாக ஆகிவிட்டது என்றால் சரிதான்.அதனால் தான் என் கணவர் 1ம் எதிரி விவாகரத்து கேட்டு வழக்கு போட்டார் என்றால் சரிதான். விவாகரத்து வழக்கு போட்டதால் நான் கோபபட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஜீவனாம்சம் கேட்டு 1ம் எதிரியின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.சேர்ந்து வாழ்வதற்கு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.விவாகரத்து கேட்டு வழக்கு கொடுத்து நான்கு வருடம் கழித்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் சமாதனம் ஆகிவிட்டதால்

இந்த வழக்கை மேற்கொண்டு நடத்த விருப்பமில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு தள்ளுபடி செய்வதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.

ம.வி:-

இல்லை